## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.73/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 12 | நாள் | : | 23.10.2025 |
| பெயர் | : | மாரிராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23$^{th}$ day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். கழுகுமலை பக்கம் துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டி மூலம் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புவதாக பிரசுரிக்கப்பட்ட தகவல் மூலம் கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் நிறுவனத்தின் மூலம் வேலைக்கு அனுப்புவதாக கூறப்பட்டிருந்தது அதன் அடிப்படையில் நான் கரிவலம்வந்தநல்லூர் சென்று பயாட் நிறுவனம் சென்று விசாரித்தபோது என்னுடைய கடவுச் சீட்டையும் முன்பணம் ரூ.75000/- செலுத்தி பதிவு செய்யும்படி சொன்னார்கள். அவர்கள் கூறியதுபோல் ஒரு வாரம் கழித்து நேரில் சென்று ரூ.75000/- பணம் செலுத்தி கடவுச் சீட்டையும் ஒப்படைத்துவிட்டு வந்தேன். மூன்று

மாதத்திற்குள் விசா வந்துவிடும் என்று சொன்னார்கள். மூன்று மாதங்கள் கழித்து நான் விசாரிக்கச் சென்றபோது மேலும் மூன்று மாதங்கள் ஆகும் என்று சொன்னார்கள். நான் அதையடுத்து வழியுறுத்தி கேட்டபோது பிரபாகரன் பணம் பெற்றுக் கொண்டதற்கு ஒரு ஒப்புகை சீட்டு எழுதி கொடுத்தார் அது தற்போது என் கைவசம் உள்ளது. அதையடுத்து நான் சென்று பார்த்தபோது கம்பெனி பூட்டியிருந்தது. அய்யாபுரம் புறக்காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்தார்கள். என்னுடைய கடவுச் சீட்டு அவர்கள் வசம் இருப்பதாக கூறி வரச்சொன்னார்கள். நான் சென்றேன். அங்கு என்னை பணம் கட்டியது சம்பந்தமாகவும் கடவுச் சீட்டு ஒப்படைத்தது சம்பந்தமாகவும் கேட்டார்கள். சங்கரன்கோவில் நீதிமன்றத்திலிருந்து என்னுடைய கடவுச் சீட்டை திரும்ப பெற்றுக் கொண்டேன் பணம் ஏதும் தரவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் கு.வி.**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பணம் செலுத்திய நிறுவனம் பயிற்சி வகுப்புகள் நடத்தி வந்த நிறுவனம் என்றால் சரிதான். நான் அந்த நிறுவனத்திற்கு சென்று என்னை வெளிநாட்டிற்கு அனுப்புங்கள் வேலை வாங்கித் தாருங்கள் என்று கேட்டேன். அதற்காகத்தான் என்னுடைய கடவுச் சீட்டையும் ஒப்படைத்தேன். 2012 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒப்படைத்தேன் தேதி ஞாபகமில்லை. நான் திரும்ப சென்று பார்த்தபோது அலுவலகம் பூட்டியிருந்த பின்னர்தான் போலீசார் வழக்கு பதிவு செய்த விவரம் தெரிய வந்தது. எனக்கு எதிரி பிரபாகரன் எழுதிக்

கொடுத்த இரசீது பற்றிய விவரங்களை போலீசார் விசாரித்தபோது கூறினேன். என்னுடைய இரசீதை போலீசாரிடம் கொடுத்தேன் அவர்கள் வாங்கிவிட்டு திரும்ப கொடுத்துவிட்டார்கள். வெளிநாட்டிற்கு செல்வதற்கு நான் பணம் செலுத்தியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**2, 3 எதிரிகள் தரப்பில் கு.வி.**

அய்யாபுரம் காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து விசாரித்த பின்னர்தான் நிறுவனம் மீது வழக்கு போட்ட விவரம் தெரியும். நான் போலீசார் விசாரித்தபோது முதல் வாரம் நிறுவனத்திற்கு சென்று பார்த்தேன் அடுத்த வாரம் பணம் கட்டினேன் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். மூன்று மாதம் கழித்து நிறுவனத்திற்கு சென்று விசாரித்தேன் என்ற விவரத்தையும் மீண்டும் மூன்று மாதங்கள் கழித்து வரும்படி சொன்னார்கள் என்ற விவரத்தையும் போலீசார் விசாரணையில் கூறினேன். என்னை ஏமாற்றிவிட்டதாக நான் புகார் கொடுக்கவில்லை. பயாட் நிறுவனம் எங்குள்ளது என்ன வேலை செய்கிறார்கள் என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை. என்னை எந்த நிலையில் உள்ள காவலர் விசாரித்தார் என்று எனக்கு தெரியாது. காவல் துறையினர் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.23 17:17:29 +0530